547

Registered No. M. 1368

ஓம்

தருமசீலன்.

பத்திராதிபர்: தி. ஆ[illegible]ர்.

புத்தகம் 6.	உருத்திரோற்காரி ௵ வைகாசி ௴ 1923-௵ மே ௴	சஞ்சிகை 2.

JUL 1923
MADRAS

விஷய சூசிகை.

	விஷயம்.	பக்கம்.
1.	நீதிச் செய்யுட் சிந்தாமணி ...	25
2.	சந்ததிக்கழகு வந்திசெய்யாமை ...	26
3.	பிறன் மனையாளை நயவாமை ...	27
4.	தர்மத்தின் தத்வம் ...	31
5.	இந்தியர் வறுமைக்குக் காரணங்கள் ...	34
6.	தமிழ் அக்ஷர வரலாறு ...	35
7.	இரகு வம்சம் ...	39
8.	கல்வியின் பெருமை ...	45
9.	பயிர்த்தொழிலால் எளிதில் பணம் சம்பாதிக்கும் வழி.	46
10.	விநோதக் குறிப்புகள் ...	47
11.	சந்தா நேயர்கட்கு விஞ்ஞாபனம் ...	48

வருஷசந்தா ரூபா 1.] 1923. [தனிப்பிரதி அணா 0–2–0

DHARMASEELAN PRESS. MADRAS

தருமசீலன் விளம்பரம்.

இது, ஒவ்வொரு தமிழ் மாதந்தோறும் வெளிவரும். இதில், பொது நீதிகள், சங்கமருவிய நூல்களில் வெளிவராதநூல்கள், அறிவை விருத்தி செய்யத்தக்கபல நீதிகள், வியாசங்கள், பலவிநோதக் கதைகள், நாவல்கள், பொது வர்த்தமானங்கள்முதலிய பல அரிய விஷயங்கள் பிரசுரிக்கப்படும்.

சந்தா விவரம்.

வருஷம் 1-க்குத் தபாற்செலவு உட்பட இந்தியா, பர்மா, சிலோன் முதிய விடங்களுக்கு ரூபா 1—0—0

பினங், சிங்கப்பூர், தென் ஆப்பிரிக்கா முதலிய விடங்களுக்கு ரூபா 1—4—0; தனிச் சஞ்சிகை விலை அணு 0—2—0.

கவனிப்பு.

1. சந்தாதாராகச் சேருகிறவர்கள் தங்கள் முழுவிலாசத்தையும்சுத்தமாக எழுதியனுப்ப வேண்டும்.

2. முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகை பெற்றுக்கொள்ள வேண்டும்; ஒரு வருஷத்துக்குக் குறைந்து பத்திரிகை கொடுக்க முடியாது; ஒரு வருஷத்துக்கிடையில் சந்தாதாரர்கள் சேர்ந்தால் அவர்களுக்கு முந்தின மாதங்களின் சஞ்சிகைகளும் சேர்த்தனுப்பப்படும்.

3. சந்தாதாரர்கள் கடிதமெழுதினுல் தங்கள் சந்தா நம்பரைக் குறிப்பிட்டெழுதவேண்டும்.

4. இப்பத்திரிகைக்கு விஷயதானஞ்செய்வோர் கடிதத்தில் ஒரே பக்கத்தில் சுத்தமாக எழுதியனுப்பவேண்டும்; தூஷணையான விஷயங்களை எழுதலாகாது; பொது நன்மையான விஷயங்களை எழுதவேண்டும்; விஷயங்களைத் திருத்திக்கூட்டவும் குறைக்கவும் நமக்குப்பாத்தியமுண்டு; வியாசக்காரர் அபிப்பிராயங்கள் நம்மைச் சார்ந்தவைகளல்ல; விஷயதானஞ் செய்வோர் தங்கள் முழு விலாசத்தையும் எழுதவேண்டும்.

விளம்பர விகிதம்.

ஒரு பக்கத்திற்கு ஒருமாதத்திற்கு	ரூபா	10—0—0
அரைப்பக்கத்திற்கு	ரூபா	6—0—0
கால் பக்கத்திற்கு	ரூபா	3—0—0

விளம்பரத்தொகையை முன்பணமாகவே அனுப்பவேண்டும்.

தி. ஆதிநயினூர், "தருமசீலன்" ஆபீஸ்.
26. ஆச்சாரப்பன் தெரு, ஜார்ஜ்டவுன், சென்னை.

ஓம்

தருமசீலன்.

" அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு."

(All Rights Reserved.)

புத்தகம் 6 | உருத்திரோற்காரிஞூ வைகாசிமீ 1923ஞூ மேமீ | சஞ்சிகை 2.

நீதிச் செய்யுட் சிந்தாமணி.

பிறப்பும், இறப்பும் இயற்கையென்பது.

" மயற்கையிம் மக்கள் யோனிப் பிறத்தலும் பிறந்து வந்தீங்
கியற்கையே பிரிவு சாத லிமைப்பிடைப் படாத தொன்றாற்
கயற்கணி னளவுங் கொள்ளார் கவற்சியுட் கவற்சி கொண்டார்
செயற்கையம் பிறவி நச்சுக் கடலகத் தழுந்து கின்றார்."

(இ-ள்.) "மனிதர் பலபிறப்புக்களிலும் பிறந்துவந்து இவ்வுலகத்தில் இந்த மனிதர் பிறப்பில் பிறத்தலும் (அடிக்கடி சேர்ந்து ஒதுக்கித் தள்ளப்படும்) செத்தைபோல அற்பமானதாம். அப்பிறவிக்குப் பிரிவும், சாதலும் இமைப்பளவும் தடைப்படாத தொன்றாம்; ஆதலின், பிரிவையும், இறப்பையுங் குறித்து அறிவுடையார் ஒரு மாத்திரைபளவுங் கவலைகொள்ளார்; இஃதியற்கையே யாகும்; இஃதன்றிப் பிரிவின் பொருட்டு உள்ளே கவலைகொண்டவர், அப் பற்று நிறைந்த உள்ளத்தால் உளதாகும் பிறவியாகிய நச்சுக்கடலிலே அழுந்து கின்றவராவர்" என்பதாம்.

(வி-ளா.) 'இவ்வுலகத்தில் மனிதர் பற்பல பிறப்புக்களிலும் பிறந்துவந்து இம்மானிடப்பிறப்பில் தோற்றுதல் அடிக்கடி செத்தை சேருதற்குச் சமானமாம்; அந்தப்பிறவி பிரிதலும் சாதலும், அச்செத்தை அடிக்கடி ஒதுக்கித் தள்ளப் படுவதுபோல இமைப்பொழுதும் தடைப்படாமல் நேர்வது இயற்கை. ஆதலால், அறிவுடையார் பிரிவுக்கும் இறத்தலுக்கும் சிறிதும் வருந்தார். மரணத்தைக் குறித்துக் கவலை யடைவோர்க்குப் பற்று நீங்காத தன்மையால் மேலும் மேலும் பிறப்பு உண்டாகிக் கொண்டேயிருக்கும்' என்பது இதன் கருத்து. மயற்கை-துரால்; அதாவது செத்தை; இது பெருக்கித் தள்ளத்தள்ள மீண்டும் மீண்டும் வந்துசேர்ந்து கொண்டேயிருப்பது; இதுபோல் பிறவியும் ஒழிய ஒழிய மீண்டும் வந்துசேர்வது; ஆதலின், மயற்கை இதற்குவமை கூறப்பட்டது. கயற்கண்ணின் அளவு-கயல்போலும் கண்ணிற்றோன்றும் ஒரு மாத்திரையளவு. அம்-சாரியை. செயற்கை-பற்றுளத்தால் உளதாம் தொழில். பிறவி மிக்க துன்பமுடையதாகலின், அது நச்சுக்கடலெனப்பட்டது.

(சீவகசிந்தாமணி. 1393)

தருமசீலன்.

உருத்திரோற்காரிஸு வைகாசிமீ.

“புஷம் சந்ததிக்கழகு வந்திசெய்யாமை.”

இதன்பொருள் :— “சந்ததிக்கு - (ஒருவனுடைய) பிள்ளைக்கு, அழகு- அழகாவது, வந்திசெய்யாமை-(பெற்றோர்க்கு) வருத்தத்தை உண்டாக்காமை,” என்பதாம்.

ஒரு மனிதனுக்குப் பிள்ளையாகப் பிறந்தவன், பலர் வெறுக்கும்படி துர்ச்செய்கைகளைச் செய்து அவற்றால், பெற்றோர்க்கு வருத்த முண்டாகும்படி செய்யக்கூடாது. அவ்வாறின்றி வருத்த முண்டாக்கினால், அவன் தாய்தந்தையர்க்குப் பிள்ளையாகப் பிறந்தும் பயனில்லை. அவன் பலராலும் நிந்திக்கப்பட்டுத் தாய் தந்தையர்க்கும் உதவாமல் உலக இன்பமும் பெறாமல் துக்கத்துடனே நாளைக்கழித்து மரணத்தின் பின் நரகத்தையடைவான். கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்து,

> “மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
> யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல்”

என்பதற்கிணங்கப் பலரும் தன்னைக் கொண்டாடும்படி நன்னெறியில் நடந்து தாய் தந்தையர்க்கும் மனக்களிப்பை யுண்டாக்கிப் புகழைத் தேடிக்கொள்ளுதலே புத்திரனாகப் பிறந்தவனுக்குரிய கடனாம். இத்தகைய புத்திரனைப் பெற்றவர்கள் பேரானந்த மடைவார்கள். இவ்வகைச் சற்குணப் புதல்வன் இம்மைப் பயனையும் மறுமைப் பயனையும் பெற்றின்புறுவான்.

இக்காலத்தில் சிலபிள்ளைகள் தாய் தந்தையருக் கடங்காமல் தங்கள் மனம்போனபடி தீயர்களோடு சேர்ந்து கைப்பொருளைத் துர்க்காரியங்களுக்குச் செலவுசெய்து, தங்களுக்குப் புத்தி சொல்ல வரும் தாய்தந்தையரை உதைத்துப் பஞ்சமா பாதகங்களிற் புகுந்து விரைவிற் கெட்டுச் சோற்றுக்கு வழியின்றித் துக்கப்பட்டலைவதைப் பிரத்தியக்ஷமாகக் காண்கிறோம். அவர்களெல்லோரும் இத்தகைய நீதிகளைக் கடைப்பிடித் தொழுகுவாராயின் நலம் பெறுவார்கள்.

(திருவருட்சகாயம்.)

21450

பிறன்மனையாளை நயவாமை.

அதாவது: காமமயக்கத்தினால் பிறருடைய மனையாளை விரும்பாதிருத்தல்.

" அச்சம் பெரிதா லதற்கின்பஞ் சிற்றளவா
னிச்ச நினையுங்காற் கோக்கொலையா—னிச்சலுங்
கும்பிக்கே கூர்த்த வினையாற் பிறன்றார
நம்பற்க நாணுடை யார்"

என்றவாறு நாம் பிறன்மனையாளை நயப்பதினால் அச்சம் அதிகமாவுண்டாகும்; சிற்றின்பமோ அதிகக்கொஞ்சம். உண்மையாக ஆராய்ந்து பார்க்குமிடத்தில், இதனால், நமக்கு இம்மையில் இராஜ தண்டனையும், மறுமையில் நரகமும் கிடைக்கும். இம்மாதிரியான செயல் செய்தவர்கள் தற்காலத்தில் தண்டனை அடையும் விதங்களைக் காணலாம். சரித்திரவாயிலாகப் பார்ப்போமாயின் மோகத்தாற் கெட்ட பலரைக் காணலாம். அவர்கள் நாடு நகரங்கள், உற்றார்பெற்றார் இவர்களுடன் தம் உயிரையும் பலிகொடுக்கச் செய்தது இந்தக் காம மயக்கமல்லவோ. ஆந்தோ! நம்மவர்களே! பிறன்மனையாளை நயவாதிருக்கவேண்டும்.

பிறன்மனையாளை விரும்புகின்றவர்கள் மறுமையில் அடையும் நரகத்தை

"வம்புலாங் கூந்தல் மனைவியைத் துறந்து பிறர்பொருள் தாரமென் றிவற்றை
நம்பினா ரிறந்தால் நமன்தமர் பற்றி யெற்றிவைத் தெரியெழுகின்ற
செம்பினா லியன்ற பாவையைப் பாவீ தழுவென மொழிவதற் கஞ்சி
நம்பனே வந்துன் திருவடி யடைந்தேன் நைமிசா ரணியத்து ளெந்தாய்"

என்ற பெரிய திருமொழியாலும்,

" தங்கிருட் போதில் தலைச்சென் றயல்மனை
யுக்கு மகிழ்ந்தா ளவளிவள் தாணெனச்
செங்கன லேயென வெம்பிய செம்பினிற்
பொங்கனற் பாவைகள் புல்லப் புணர்ப்பார்"

என்ற சூளாமணிச் செய்யுளாலும்,

" காதலாள் கரிந்து நையக் கடியவே களிந்து கன்றி
ஏதிலான் தாரம் நம்பி யெளிதென விறந்த பாவத்
தூ துலை யுருக வெந்த வொள்ளழற் செப்புப் பாவை
ஆதகா தென்னப் புல்லி யலறுமால் யானை வேந்தே"

என்ற சிந்தாமணிச் செய்யுளானு முணர்க.

இன்னும், பிறனுடைய தாரத்தை விரும்புகின்றவர்களிடத்தில்

தருமசிந்தனை, கீர்த்தி, சிநேகர், பெருமை ஆகிய இந்நான்கும் ஒரு காலும் வந்து சேரா; ஆனால் பகை, பழி, பாவம், அச்சம் இவைகள் வந்து சேரும்;

> "பகைபாவ மச்சம் பழியென நான்கு
> மிகவாவா மில்லிறப்பான் கண்"

என்ற திருக்குறளின் ஈரடியாலும்,

> "அறம்புகழ் கேண்மை பெருமையிந் நான்கும்
> பிறன்றாரநச்சுவார்ச் சேரா—பிறன்றார
> நச்சுவார்ச் சேரும் பகைபழி பாவமென்
> றச்சத்தோ டிந்நாற் பொருள்"

என்ற நாலடியாலும் இவற்றை யுணர்க. இன்னும்,

> "புக்க விடத்தச்சம் போதரும் போதச்சந்
> துய்க்கு மிடத்தச்சந் தோன்றுமற் காப்பச்ச
> மெக்காலு மச்சந் தருமா லெவன்கொலோ
> வுட்கான் பிறனில் புகல்"

என்றபடி பிறன்மனையாளிடம் போகும்போதும் பயம்; திரும்பி வரும்போதும் பயம்; சுகமனுபவிக்கும்போதும் பயம்; பிறர் அறியாமற்காக்கும் விஷயத்திலும்பயம்; இங்ஙனம் எக்காலும் அச்சந்தருதலால் ஒருவன் மனங்கூசாது பிறனில் புகலால் பயனென்னை?

இஃதன்றியும், ஒருவன் பிறன்மனையாள் இல்லம் போவதைப் பிறன் கண்டால் தன்குலத்துக்கின முண்டாகும். அகப்பட்டுக் கொண்டால் கால், தலை போய் விடும். அத்தீச் செயலைச் செய்கையில் அவனுக்குப் பயந்தோன்றும்; நெடுநாள் வரை நரகவேதனை யுண்டாகும்.

இந்திரியங்களை அடக்குதலே ஆண்மை. அதுவே வீரம். அவற்றைத் தீய வழியில் விடுதலே ஆணின்மையாகும். இதனை "பிறன் கடை நின்றாரிற் பேதையாரில்" "பிறன்மனை நோக்காத பேராண்மை" என்பவற்றாலுணர்க. புறப்பகைகளை யடக்கும் ஆண்மையுடையார்க்கும், உட்பகையாகிய காமம் அடக்குதற்கு அருமையின் அதனை யடக்கிய ஆண்மையைப் பேராண்மை யென்றார் பெரியோர். ஆதலின், பிறன்மனை நோக்காத பேராண்மையை நாம் கைக்கொள்ள வேண்டும். இங்ஙனங்கொள்ளாமல்,

> "செம்மையொன் றின்றிச் சிறியா ரினத்தராய்க்
> கொம்மை வருமுலையா டோண்மரீஇ—யும்மை

வலியாற் பிறர்மனைமேற் சென்றாரே யிம்மை
யலியாகி யாடியுண் பார்"

மேலும், ஒருவனுடைய மனையாளின்மேல் வேறு ஒருவன் பிரியப்பட்டதை அவன் அறிவானாயின் அப்புருடனுக்கு எவ்வளவு கோபம் இருக்கும்; மனம் எவ்வாறு துடிக்கும். இதை வாசிக்கும் நண்பர்களே இவற்றை அறியக்கூடும். தன்னைப்போல் பிறரையுங் கருத வேண்டும்.

"பல்லா ரறியப் பறையறைந்து நாட்கேட்டுக்
கல்யாணஞ் செய்து கடிபுக்க—மெல்லியற்
காதன் மனையாளு மில்லாளா வென்னொருவ
னேதின் மனையாளை நோக்கு"

என்றபடி, பலர் அறிய அக்கினி சாக்ஷியாக மணந்துகொண்ட ஓர் பெண்ணை விட்டுவிட்டு, வேறொருவன் மனையாளை விரும்புவதால் யாது பயன்? அதனால் அவனை;

"அறனிற் கொண்ட தன்மனையா ளமளித் தலத்தி லழுதிரங்கப்
பிறனிற் றேடும் பெரும்பாவி"

என்று பாரதத்தில் சொல்லியபடி அறிஞர் நிந்திப்பர்.

"அம்ப லயலெடுப்ப வஞ்சித் தமர்பரீஇ
வம்பலன் பெண்மரீஇ மைந்துற்று—நம்பு
நிலைமையி னெஞ்சத்தான் றுப்புரவு பாம்பின்
றலைநக்கி யன்ன துடைத்து"

என்றபடி பிறர் பழிக்கவும், உறவினரும், நண்பரும் என்ன நேருமோ என்று அஞ்சவும், பிறர்மனை நயப்பவனது இன்பமானது, பளபளப்பாயிருக்கும் பாம்பின் தலையை நக்கி விஷத்தால் உடனே மரணமடைவதை நிகர்க்கும். அது விரைவிற் பெருந்துன்பத்தை விளைவிக்கும்,

"பரவா வெளிப்படா பல்லோர்கட் டங்கா
வுரவோர்கட் காமநோ யோஒ கொடிதே
விரவாரு ணாணுப் படலஞ்சி யாது
முரையாதுள் ளாறி விடும்,"

என்றபடி, அறிவுடையாரிடத்து வினைவசத்தாற் காமமுண்டாயின், அது விருத்தியாகாமலும், வெளிப்படாமலும், பல விடங்களிற் செல்லாமலும் உள்ளேயே ஆறிப்போகும். ஆதலின், அறிஞர் மோகத்தை அடக்கவேண்டும். பாணமும், நெருப்பும், பல கிரணங்களோடு கூடிய கதிரவனும் வெப்பங்கொண்டு சுட்டாலும் புறமாகிய உடம்பையே சுடும். ஆனால் காமமோ வெப்பங்கொண்டு சுட்டாலும் அக

மாகிய நெஞ்சைக் கவலைக்குள்ளாழ்த்திச் சுடும். ஆகலின், அவற்றைக் காட்டினும் இதற்கஞ்சவேண்டும்.

"அம்பு மழலு மவிர்கதிர் ஞாயிறும்
வெம்பிச் சுடினும் புறஞ்சுடும்—வெம்பிக்
கவற்றி மனத்தைச் சுடுதலாற் காம
மவற்றினு மஞ்சப் படும்"

என்ற நாலடிச் செய்யுளால் இஃதுணரப்படும்.

இன்னும் ஊர் முழுவதையும்பற்றி யெரிக்கும் நெருப்புக்குப் பயந்தால் தண்ணீரில் மூழ்கியாயினும் பிழைக்கலாம்; காம நெருப்பு, மலையின்மேல் ஏறி ஒளிந்தாலும் தண்ணீரில் மூழ்கிக்கொண்டு ஒளிந்தாலும் சுடாது விடாது. இதனை,

"ஊருளெழுந்த வுருகெழுசெந் தீக்கு
நீருட் குளித்து முயலாகு—நீருட்
குளிப்பினுங் காமஞ் சுடுமேகுன் றேறி
யொளிப்பினுங் காமஞ் சுடும்"

என்பதாலுணர்க.

சோதர சோதரிகாள்! பிறன் மனைவியை இச்சிப்பதால் பல்வித துன்பங்கள் உண்டென்பதற்கு இன்னும் பல கதைகளும் இருக்கின்றன. ஸ்ரீ இராமச்சந்திர மூர்த்தியின் தர்ம பத்தினியாகிய ஜானகியார்மீது விதியின் கொடுமையால் மிகுந்த மோகங்கொண்டு அவரைத் தன் தலைநகரங் கொண்டுபோய்த் தனக்கு மனைவியாகும்படி வற்புறுத்திக் கொண்டிருந்த இராவணன் நிலைமையைப் பாருங்கள். அவன் செயலை அறிந்த மகாவிஷ்ணுவே அவதாரமாக வந்த இராகவர் இலங்கைமா நகரஞ் சென்று இராவணனைக் குலத்தோடும் கொன்று, அவன் சகோதரனுக்குப் பட்டங்கட்டி வைத்தார். இங்கு பாருங்கள்; காமத்தினாலல்லவா இராவணன், யானைகளென்ன, குதிரைகளென்ன, தேர்களென்ன, காலாட்படைகளென்ன, சகோதரர்களென்ன, சீரும் சிறப்பும் வாய்ந்த அரசாக்ஷியென்ன இவைகளையெல்லாம் இழந்தான். இன்னும் அவனது தங்கை சூர்ப்பநகை காமத்தினாலல்லவா இலக்குமணரிடம் மூக்கும் தனமும் அறுபட்டாள். மேலும், காமநோயா லல்லவா கீசகன் உயிரிழந்தான்; அந்தோ! காமத்தின் கொடுமையைக் கவனித்துப் பாருங்கள். இது மனிதரை அழித்துவிடத் தக்கது.

ஆதலின், என் நண்பர்கள் யாவரும் பிறன் தாரத்தை இச்சிக்காமல் தன் தாரத்தினிடமே அன்புகொண்டு வாழ்ந்து வருவார்க

ளாக, என் சகோதரிகள் யாவரும் பிறனிடத்து மனஞ்செலுத்தாது பதிவிரதைகளாய் இவ்வுலகத்தில் புகழுடனிருந்து சுவர்க்கம் புகுவார்களாக.

எஸ் என் [இராமு,
கூறைநாடு.

தர்மத்தின் தத்வம்.

யுக்திக்கு எல்லையே கிடையாது. ஸ்ருதி வாக்கியங்களோ பரஸ்பரம் விருத்தங்கள்போல் கொள்ளப்படுகின்றன. மகரிஷிகள் சொல்லியிருக்கும் மார்க்கத்தில் ப்ரவ்ருத்திப்போமென்றால் அவர்களுக்குள்ளும் ஒற்றுமையைக் காணோம். தர்மத்தின் தத்வமும் ஸுலபமாக அறியக்கூடியதாக இல்லை. ஆகையால் ஜனங்கள் போகும் வழியையே நாம் மார்க்கமாகப் பற்றவேண்டும். உண்மையாகவே யுக்தியும், ஸ்ருதியும் மகரிஷி ப்ரணீதங்களாயுள்ள ஸ்ம்ருதிகளும் கீழ்ச் சொல்லப்பட்டிருக்கும் தோஷங்களால் ஆக்ராந்தங்களாக இருக்கின்றனவென்பது தாத்பரியமன்று.

ஸ்ருதி ஸ்ம்ருதி யுக்தி இவைகளை அவலம்பித்து நாம் தர்மதத்துவத்தை அறிய வேண்டுமே தவிர கேவலம் "ஊருடன் ஒக்க ஓடுவோம்" என்று சொல்லுவது விவேசந சக்தியையடைந்த நமக்கு ந்யாயமாகாது. ஆனால் ஜனங்கள் ஞானார்ஸத்தில் மிகுந்த தாரதம்யத்தை யுடைத்தாயிருப்பதால் எல்லாரும் ஸ்ருதி ஸ்ம்ருதி யுக்தி விசாரணையில் அதிகாரிகளாகமாட்டார்கள் என்பதை எண்ணி அப்படி அநதிகாரிகளாக விருக்குமவர்களைத்தான் இவ்வாக்கியம் குறிக்கிறது. அவர்கள் விஷயத்திலும் கேவலம் பஹுஜனப்ரவ்ருத்தி ப்ரமாணமாகி விடாது. வேதஸாஸ்த்ர தர்மங்களையறிந்த நாலு ப்ராமணர்களுடைய ஸமூகமாவது மூன்று வித்யைகளையும் அத்தியயனம் செய்திருப்பவர்களுடைய ஸமூஹமாவது "பர்ஷத்" என்று சொல்லப்படும். அப்படிப்பட்ட பர்ஷத்தின் நிர்ணயத்தைத்தான் தர்மமென்று சான்றோர் உரைக்கின்றனர். அல்லது அத்யாத்ம ஸாஸ்த்ரங்களில் நிபுணதமனுயுள்ள வேத தர்மஸாஸ்திர ஜ்ஞானன் நிர்ணயிப்பதையும் அவன் ஒருவனாக விருந்தாலும் தர்மம் என்று சாதிப்பதுண்டு. இதன்படி ஸிஷ்டர்களின் ப்ருவ்ருத்யே ப்ரமாணமாகும். மகாஜனம் என்பதற்கு ஸிஷ்டர் என்றே கொள்ளலுண்டு. இக்காலத்தில் அதிகாரி அநதிகாரி என்ற பேதமே சீர்குலைந்து விட்டது.

ஸ்ருதிஸ்ம்ருதி விசாரணை செய்வதற்குத் திறமையுடைத்தாயும், ஆஸ்திக்யத்தை வஹித்து மிருக்கும் அதிகாரிகளில் அநேகர் ஐஹீக வ்யாபாரத்தில் அத்தியனம் ப்ரவ்ருத்தர்களாய் இதரர்கள் அனுஷ்டிக்கும் தர்மங்களையே ஸத்தர்மங்களென்று எண்ணி எவ்வித பரந்தையும் உணராமல் அவைகளையே யந்தப் பரம்பரையாக அநுஷ்டித்து வருகிறார்கள். ஐஹீக வியாபாரத்தில் அவ்வளவாக ப்ரவ்ருத்திக்காமலிருக்கும் அநதிகாரிகளில் அனேகர் தமது அநதிகாரத்தையும் கவனியாமலே ஸ்ருதி விசாரணையில் ப்ரவ்ருத்தித்து அனேக விஷயங்களில் பஹுப்ரசாரம் தவறான நிர்ணயங்களையும் தவறான அனுஷ்டானங்களையும் செய்திருக்கிறார்கள் என்பதும் ப்ரத்யக்ஷ ஸித்தமாக விருக்கிறது. அபூர்வமாகச் சில விடங்களில் சில ஆஸ்திகர்கள் மாத்திரம் தர்மம் இவ்விதமாகச் சீர் குலைந்திருப்பதையும் அதர்மங்களில் ஜனங்களுக்கு ஏற்பட்டிருக்கும் அவிவேகத்தையும் பார்த்து பயந்து ஜகத்துக்குத் தர்மத்தைப் போதிப்பது உன்மத்த க்ருத்யமாகுமென்று எண்ணி யுணர்ந்து ப்ரகடநம் செய்து கொள்ளாமலே தம்மைப்பற்றின வரையில் எம்பெருமானுக்குகப்பாகும் படி வர்த்தித்து வருகிறார்கள். அவர்களது க்ருத்யமும் அநுஷ்டானமும் ஜெகத்துக்கு கோசாரமாகாமலே போய்விடுகின்றன. இதுவும் பகவத் ஸங்கல்பமே. தர்மத்தின் ஸ்திதி யதார்த்தமாகவே யிப்படி யில்லை. வஸ்து ஸ்திதியைக் கொஞ்சம் பராமர்ஸித்துப் பார்த்தால் இந்த ஸங்கைக்கு அவகாச மிருக்குமென்பது விளங்கும். லௌகிக விவகாரங்களில் ப்ரவ்ருத்தித்திருக்கும் சிலரை ஆஸ்திக்ய முள்ளவர்களாகவே நாம் அறிகிறோம். ஆனால் அவர்கள் ஸாஸ்த்ர பரிஸீலனம் செய்ய அவகாச மற்றவர்களாய்ச் சில அஜ்ஞர்களின் அநுஷ்டானத்தையும் நிர்ணயத்தையும் ப்ரமாண மாக அவலம்பித்து முக்கியமான சில தர்மங்களைக் கைதவற விட்டு அமுக்கியமாய்ச் சில வற்றை ப்ரதானம் போல அநுஷ்டித்து வருகிறார்கள். காலங்களில் நித்ய நைமித்திக கர்மங்களைச் செய்வதையும் கர்மானுஷ்டானங்களில் அந்தரிந்த்ரிய ஸுத்தியும் யதார்த்த வசநமும் இந்த்ரிய நிக்ரஹமும் ஆகிய இவைகளெல்லாம் அவஸ்யமாக க்ரஹிக்கப்படவில்லை. வக்ரமும் மாத்ஸர்ய ப்ரயுக்தமுமான வ்ருத்தியுமே ஸஹஜமாகி விட்டன. பாப்ரதாரணமென்பதில் எவ்விதப்பாபமும் அறியப்படவில்லை. ப்ரதாரணத்தில் ஸமர்த்தர்களும் அவ்விய வஸ்திதமான இந்த்ரிய ப்ரவர்த்தியை உடையவர்களுமே பரமயோக்கியர் என்று க்ரஹிக்கப்படுகிறது. புண்டர தாரணாதிகளிலும் வைதீக பரிபாஷைகளி

லும் பாஹ்யமான பகவ தாராதன தந்த்ரங்களிலும் அதி மாத்திரம் விஸ்வாஸத்தைப் பாவித்துக் கொண்டு அந்த பாவனையையே ஸர்வ வித அகார்யத்திலிருந்தும் ஸம்ரக்ஷகமென்று எண்ணி அஸத்திய வசநத்திலும் மந: பூர்வமாய் ப்ரவர்த்திப்பவர்களை அநேகமாக எல்லா இடங்களிலும் காணலாம். நாம் அபிஜாத்யத்தை உடையவர் என்னும் மதத்தை மனங்கொண்டு தாம் எந்த அகாரியத்தையும் செய்யலாமென்று அநேக மஹா குலப்ரஸூதர்கள் ப்ரவ்ருத்திக்கிறார்கள்.

தனத்தையும் ஸ்வல்ப பராக்ரமத்தையும் உடைத்தாயிருக்குமவர்கள் விஷயத்தில் காரியாகாரிய விவஸ்தையை அங்கீகரியாமலே அவர்கள் செய்யும் அகாரியங்களுக்கெல்லாம் ஸாஸ்த்ர ஆதாரத்தைத் தேடி அவைகள் ஸாஸ்த்ரீகங்களென்று நிர்ணயிக்கப் படுகின்றன. ஸர்வ வியாபியாகவும் ஸர்வ ஸாக்ஷியாயுமிருக்கும் ஈஸ்வரன் விஷயத்திலும் தமக்குள் பரஸ்பரம் காபட்யத்தை வஹித்து ஏமாற்றுவதில் ப்ரவ்ருத்திப்பதுபோல அவன் விதித்திருக்கும் ஆஜ்ஞைகளை புத்தி பூர்வமாக அதிலங்கநம் செய்துகொண்டே அநர்க்கமான உபகார சமர்ப்பணம் போன்ற பாஹ்ய வியாபாரத்தால் அவனை ஏமாற்றவும் அவனது ப்ரீதியை ஸம்பாதித்துக் கொள்ளவும் முயலும் வேஷதாரிகளை நாம் பார்க்கிறோம். இவர்களெல்லாரும் தர்மாதர்ம விதானம் செய்வதில் அதிகாரிகளாக வெளி வருவதையும் அவர்கள் சொல்வதையும் பார்க்கும் நமக்கு மிக்க சோக முண்டாகிறது. ஸ்வர்ணஸ்தேயம் அஸத்வசநம் இந்த்ரிய பாரதீநதை இவைகளெல்லாம் தோஷங்களல்லவென்றும் இவைபோன்ற அதர்மங்கள் நூற்றுக்கணக்காக விருந்தபோதிலும் நியதமான புண்ட்ரதாரணமும் அநார்ஜவமான ஸரணாகதியும் தன்னைக் காப்பாற்றி விடுமென்று நினைத்து இருப்பவர்களின் தார்மிகத்வத்தைப் பற்றி நாம் என் சொல்வோம். புண்ட்ரதாரணம் பிசகென்றாவது ஸரணாகதி ஸ்ரேயஸ்ஸாதகமென்றாவது நமது அபிப்பிராயமன்று. ஸாஸ்திரங்களுக்குக் கட்டுப்பட்டிருக்கும் நமக்கு அவைகள் அவஸ்யம் அபேக்ஷிதங்களென்றே ஒரு நம்பிக்கையுண்டு. ஆனால் ப்ராமணன் முதல் சண்டாளர் பர்யந்தம் ஸாதாரணமான சில தர்ம ஸாதனங்கள் இல்லாவிடத்தில் இவை போன்ற பாஹ்ய வியாபாரங்கள் கார்யாகாரி யாகா என்று த்ருடமாகச் சொல்லலாம். ஸாஸ்திரங்களை ஈஸ்வராஜ்ஞை என்று அங்கீகரித்தால் அவைகளில் அல்பாம்ஸமான ஏகதேஸத்தை மாத்திரம் விஸ்வஸித்து மற்றைப் பாகத்தை அநாதரிப்பது தர்மமாகாது. ஈஸ்வர ப்ரீ

திக்கு ஆந்தாமரான ஸாத்தியுடன் கலந்து நிற்கும் பாஹ்யஸாத்தியே ப்ரயோஜன மென்பதை அறியவேண்டும். ஆகையால் இந்த தத்வத்தை ஸ்தாமநஸ்ஸில் உபஸ்த்திதமாக வைத்துக்கொண்டுணராமல் எல்லோரும், ஏகாநதனுய் அழிவற்றவனு யிருக்கும் ஸ்ரீபகவானிடத்தில் பக்தியுடனிருந்து தர்மத்தைக் கடைத்தேற்றுதலவஸ்யம்.

நடதூர்-வரதாச்சாரி,
வில்லிபுரம்.

இந்தியர் வறுமைக்குக் காரணங்கள்.

இந்திய சகோதரர்களே! நம் நாட்டில் சிற்சில தனவந்தர்கள் ஆங்காங்கே காணப்படினும் பெரும்பான்மையும் வறுமைக்குட் பட்டவர்களே அதிகரித்திருக்கின்றனர். இதாநாடுகளில் வறிஞர் குறைந்தும் நம் நாட்டில் அதிகரித்துமிருப்பதற்குக் காரணங்களெவையென்று ஆராய்ந்தால் அநேகம் காரணங்கள் புலப்படுகின்றன: நம்மவர், ஊதியம் வரும் தொழில்களைச் சுறுசுறுப்புடனும் ஊக்கத்துடனும் செய்வதில்லை. 'எதுவும் விதிப்படி தான் நடக்கும்' என்று தொழிலிற் பிரவேசிக்காமல் சோம்பி யிருப்பார்கள். சொற்பசம்பளமுள்ள உத்தியோகமோ, அற்பவரும்படியுள்ள வியாபாரமோ கிடைத்தால், 'இவைதாம் நம் தலையில் விதிக்கப்பட்டன' என்று அவற்றிலேயே கிடந்துழன்றுகொண்டு, மேலே அதிக வரும்படியுள்ள வேலைகளைச் செய்யும் முயற்சியற்றிருந்து விடுவார்கள்; மிக்க ஐசுவரியத்தைத் தரும் விவசாயத்தையும், வியாபாரத்தையும் கவனிக்காமல் உத்தியோகமென்னும் அடிமைத் தொழிலையே அதிகமாக விரும்புவார்கள். தங்கள் வருவாய்க்குத் தக்க செலவு செய்யாமல் அனுவசியமாகக் கடன் வாங்கி இடம்பச் செலவுகளை அதிகமாகச் செய்வார்கள். இருப்பதை யெல்லாம் விற்றுவது கடன் பட்டாவது பெண்களுக்கு வா தக்ஷிணை கொடுப்பார்கள்; பிள்ளைகளுக்குக் கலியாணம் நடத்துவார்கள்; விசேஷ காலங்களில் அனுவசியமாக அதிகப்பணங்களை மொய் யெழுதுவார்கள். அதிக வரும்படியில்லாதவர்களும் கடன் பட்டாவது இடம்பமாக ஆடைகளிலும் ஆபரணங்களிலும் பணத்தைச் செலவிடுவார்கள்; அவசியமில்லாத காரியங்களுக்கெல்லாம் ஊர்ப்பிரயாணம் செய்து புகைவண்டிக்கும் கப்பலுக்கும் ஏராளமான பணங்களைக் கொட்டுவார்கள் ; வீணே வம்பு வழக்குகள் இழுத்துக்கொண்டு கோர்ட்டுச் செலவுக்கும், வக்

லில் பேசுக்கும் சொத்துக்களை விற்பார்கள். கூத்துக்கும், பயாஸ் கோப்புக்கும், காப்பி ஹோட்டலுக்கும் ஒவ்வொரு நாளிலும் அதிகப் பணங்களைச் செலவிடுவார்கள்; நமக்கவசியமில்லாத அன்னிய நாட்டுப் பொருள்களை யெல்லாம் அதிகப்பணம் கொடுத்து வாங்கி வீட்டில் நிரப்புவார்கள்; மேல் நாட்டார் பார்த்துப் பரிகசிக்கும்படி அவர்களைப்போல அரையும் குறையுமாக நடிக்கத்தொடங்கி அந்த நடிப்புக்களுக்காக அளவற்ற பொருள்களைப் போக்குவார்கள்; முன்னோர் தேடிவைத்த பொருளை விருத்தி செய்யாமல் சீக்கிரம் செலவு செய்து ஒன்றுமில்லாமலாக்கி விடுவார்கள்; ஜீவிப்பதற்கு ஏதேனும் தொழிலைச் செய்யாமல் இலவசத்தில் செலவிட மாமியார் வீட்டுப் பொருளாவது வேறு யாருடைய பொருளாவது கிடைக்குமாவென்று ஏங்கித் திரிவார்கள்; பெரிய தொழில்களைப் பலபேர் ஒன்று கூடிச் செய்ய மாட்டார்கள்; பொறாமை, விரோதம் முதலிய துர்க்குணங்களை அதிகமாகக் கொள்வார்கள்; எந்தக் காரியத்தையும் வரம்பாகச் செய்ய மாட்டார்கள்; வாக்குறுதியை நிறைவேற்ற மாட்டார்கள்; திண்ணைகளிற் கூடி ஓயாமல் ஊர்க்கதைகளையே பேசிக் கொண்டிருப்பார்கள்.

நம்மிந்திய சகோதரர்களில் பெரும்பான்மையோர் இவைகளையும் இன்னும் இவைபோன்ற பல துர்க்குணங்களையும் கைக்கொண்டிருப்பதனுற்றான் தரித்திரவாரிதியில் மூழ்கித்தளர்ச்சி யடைகின்ருர்கள். அன்னிய நாட்டார் இவ்விழி குணங்களை அகற்றிப்பொருள் வருவாய்க்கும், மீதிக்கும் ஏதுவாயிருக்கும் பற்பல தொழில்களையும் குணங்களையும் கொண்டிருப்பதால் நாடோறும் செல்வத்தில் மிகுந்து சிறப்படைந்து மாருச்சுகம் பெற்று வாழ்கின்றனர். இங்ஙனம் சுகமடையும் புற நாட்டாரைப் பார்த்தாவது நம்மவர் சுகப்படும் மார்க்கங்களில் பிரவேசிக்காதிருந்து வருகின்ருர்கள். இவர்கள் எக்காலத்தில் மேற்கூறிய இழி குணங்களை ஒழித்துப் பெருங் குணங்களைக் கொள்கின்ருர்களோ அப்பொழுது தான் இந்தியாவானது வறுமை நீங்கிப் பெருமையடையும்.

இந்திய சகோதரன்.

தமிழ் அக்ஷர வரலாறு.

[இது, தமிழர்களின் நன்மையைக் கருதி 'விஸ்வ வித்யா விநோதினி' என்னும் ஓர் பழைய பத்திரிகையிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டது.]

அக்ஷரமென்பதற்கு அழிவற்றதென வர்த்தமாம். எழுதப் படுவதால் எழுத்தெனச் சொல்வர் தமிழர். தமிழ்ப் பாஷைக்கு

எழுத்துக்கள் ஏற்படுத்தினவர் இன்னாரென் றுரைக்கச் சரியான அத்தாக்ஷிகளில் யாதொன்றுமில்லை. அகஸ்தியருக்குத் தமிழ் கற்பித்தவர் சுப்பிரமணியரென்றும், திருவிளையாடல் பிரகாரம் சிவபிரானே அகஸ்தியருக்குத் தமிழ் கற்பித்துத் தென் நூலாசிரியராக அவரால் அவர், அனுப்பப் பட்டதாகவும், அவர் வட நூலாசிரியராக பாணினிக்கு சமஸ்கிருத பாஷை போதித்ததாகவும் பின்வரும் பாடலால் தெரியவருகிறது.

“ விடையுகந்தவன் பாணினிக்கிலக்கண மேனாள்
வடமொழிக்குரைத் தாங்கியன் மலயமாமுனிக்குத்
திடமுறுத்தியம் மொழிக்கெதிராக்கிய தென்சொன்
மடமகட் கரங்கென்பது வடதிராடன்றே.”

நன்றாக யோசிக்குங்கால், எவ்வாறு ஆரியர்கள் ஆதியில் வடநாட்டிலிருந்து தென் நாடுகளுக்குள் பிரவேசித்தார்களோ அவ்வாறே தென் நாட்டுத் தமிழர்களும் வட நாடுகளுக்குள் பிரவேசித்திருப்பார்களென்றும், அவர்கள் மூலமாக அகஸ்தியர் தமிழ் பாஷையை அறிந்து, தக்ஷணத்திற்கு வந்து, எழுத்தில்லாதிருந்த தமிழ் பாஷைக்கு எழுத்துக்களும், இலக்கணமு மேற்படுத்தி யிருக்கலாமென்றும் தோன்றுகின்றது. இக்காரணத்தினாலேயே அவருக்குத் தமிழ் பாஷைக்குத் தகப்பனென்றும், குறுமுனியென்றும், தென் நூலாசிரியரென்றும், நாமங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

புராதன ஆராய்ச்சியுடையோர், கிறிஸ்து பிறக்குமுன் எழுநூறு வருஷங்களுக்குள், பெனிஸ் தேசத்தார்களால் எழுத்துச் சின்னங்களேற்படுத்தி யிருப்பதாகக் கண்டறிந்திருக்கிறார்கள். இவ்வாராய்ச்சியின் பிரகாரம் மனுஷர் பேசிவரும் பாஷைகளுக்கு எழுத்துண்டானது 3000 வருஷத்துக்குட் பட்டிருக்குமென்றே சொல்ல வேண்டும். தென்னாட்டு மதுரைத்தமிழ்த் தலைச்சங்கத்தில் சிவபெருமானும் அகஸ்தியரு மிருந்ததாகத் தமிழ்நாட்டு நூலாசிரியர்களின் சாதனம். எவ்வாறாயினும், எழுத்தில்லாத பாஷைகளைப் பேசினவர்களின் அறிவையும், அநுபவத்தையும், ஞானமாகக் கூறிவந்த வசன வதந்திகளையும், காவியப் பாடல்களையும், எழுத்தேற்படுத்தி அதன் மூலமாக மனுஷஞானத்தை ஸ்தாவரமாயிருக்க நூல்கள் ஏற்பட்டதாக நம்பல்வேண்டும். வேதமே எழுதாக்கிளவியாகப் பூர்வ காலத்திலிருந்ததாகத் தெரியவருகிறது.

தமிழ்பாஷையின் அக்ஷரங்கள் தமிழ் உச்சரிப்புக் கியன்றது போல ஏற்படுத்தி இருக்கலாமென்று நம்ப இடங்கொடுக்கின்றன. ஏனெனில் உயிர்மெய்கள் வடநூல் விதிக்கொப்புமையா யிருந்த

போதிலும் மறுபாஷைகளில் வழங்கிவரும் துவனியான எல்லா சப்தங்களுக்கும் ஏற்ற வக்ஷரங்கள் தமிழில் இல்லை. இதன்றி எ. ஒ. என்னும் உயிரெழுத்துக்களும் ழ. ற. ன. என்னும் மெய்யெழுத்துக்களும் தமிழுக்குரிய விசேஷ எழுத்துக்களாகச் சமைந்திருப்பதை ஆலோசிக்கும்போது, தமிழர் உச்சரிப்புக் கேற்றதாகவே அகஸ்தியர் தமிழ் எழுத்துகளை இயற்றி யிருக்கலாமென்று ஒத்துக் கொள்ள வேண்டும். இதனாலேயே வடமொழிகளும் வட நூல்களும் இந்நாட்டில் வழங்கி வருவதற்காக திராவிட கிரந்தாக்ஷரங்களை ஏற்பட்டிருப்பதாய்த் தோன்றுகிறது. தமிழ்பாஷை தவிர மற்றுள்ள பாஷைகளில் எல்லா சப்தமும் கூடியவரை எழுத அக்ஷரங்களிருப்பதால் அவைகளைக்கொண்டு ஒவ்வொரு பாஷையின் உச்சரிப்புக்கும் பேதமின்றி எழுதி வரும்படியான பிரயோஜனத்தையும் காண்கிறோம்.

உயிர்மெய் யெழுத்துத் தொடர்களை எண்ணெழுத்தெனத் தமிழ் இலக்கணிகள் கூறியும், சாதாரணமாகப் பள்ளிப்பிள்ளைகள் "அரிச் சுவடி" என்றே சொல்லுகிறார்கள். இச்சுவடிக்குக் காப்பாக "ஹரி நமோத்துசிந்தமென்றுதியைக் கும்பிட்டு, அரிச்சுவடி சொல்வேன் அன்மர்து" என்பதையும், தெலுங்கு திராவிட பாஷையாயிருந்தும் "ஓம் நமசிவாய" என்ற காப்பை அப்பாஷையின் அட்சாகுட்சிக்கு வைத்துப் பாடஞ்சொல்லி வருவதையும் சிந்திக்குங்கால், ஆரியர்களாலேயே திராவிட நூல்களுக்கு ஆரம்பம் சம்பவித்திருக்கலாமென்று சொல்லவிடங் கொடுக்கும். முக்கியமாய் மதசம்பந்தமான விஷயங்களைச் சார்ந்த நூல்களும் புராணங்களும் சாஸ்திரங்களும் வடநூல்களின் பெயர்ப்பென்றே நன்றாக விளங்குகின்றன. இதுவன்றி இவ்விஸ்தலயாத்திரை நதி தீரங்களுக்கும் முக்கிய நகரங்களுக்கும், இருக்கும் நாமங்கள் வடமொழிகளா யிருப்பதையுஞ் சிந்தித்து ஆலோசிக்க வேண்டியிருக்கிறது. மதுரையில் தமிழுக்குத் தலைமையாயிருந்த சபைக்கே "சங்கம்" என்ற வடமொழி நாமமாகப் பாவித்திருப்பதே, தமி என்னும் மூலவாக்கு தனிமை என்றுரைத்து அதினால் தமிழ் தனிபாஷை என்று சித்தாந்திப்போர்களின் கொள்கைக்கு விரோதமாக முடியும்.

தமிழர் பெரும்பாலும் சைவர்களா யிருக்கும்போது அவர்களுக்கேற்படுத்தின எண்ணெழுத்தின் காப்பு ஹரியை நமஸ்கரிக்கும் உபதேசமாகவும், தெலுங்கர் சாதாரணமாக வைஷ்ணவர்களா யிருக்கும்போது அவர்களுடைய பாஷையின் எண்ணெழுத்தின் காப்பு

"ஓம் நமசிவாய" என்று சிவ உபதேசத்தை உடைத்தாயிருப்பதையும், கவனித்தாலோசித்தறிய வேண்டியதாயு மிருக்கிறது.

தமிழ் பாஷை கற்கும்படியான மூலபாட புத்தகங்கள் இன்னன வாயிருந்தனவென்றும் அக்கிரந்தங்களுக்கு ஆசிரியர்கள் இன்னுரென்றும் சொல்வாராகிலும் அறிந்தவர்களாகிலும் ஒருவருமில்லை. தற்காலம் வழங்கி வரும் ஔவையார் நூல்களான ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை என்பவைகளைக் கவனிக்கும்போது இந்நூல்கள் ஆதிகாலத்து நூல்களென்றும் ஒத்துக்கொள்ளாததாய் முடியாது. ஏனெனில் ஔவை, திருவள்ளுவர் முதலியோர் கடைச் சங்கமிருந்த காலத்திலிருந்ததாகக் காணப்படுகிறபடியால் மதுரைத் தலைச்சங்கத்தின் காலமறிந்தே யாதொன்றும் நிச்சயிக்கக் கூடுமேயன்றி வேறு விதங்களாலல்ல. தமிழ் நூல்கள் அதிக அபிவிருத்தியடைந்த பின் தான் தமிழ்ச்சங்க மேற்பட்டிருக்கவேண்டும்.

தற்காலத்தில் வழங்கிவரும் அக்ஷரங்கள் முற்காலத்திலிருந்த எழுத்துக்களுக்குச் சில ரூபபேதங்களை யுடைத்தாயிருக்கின்றன.

ஆதியில் உபயோகித்து வந்த அக்ஷரங்களை "வட்டெழுத்து" என்று சொல்லுதல் நாளா வட்டத்தில் மாறித் தற்காலம் அச்சில் காணப்படுகிற ரூபங்களை அடையலாயின.

தமிழர், தமிழ் என்பது இனிமை என்றும், ஆதலால் தமிழ் பாஷையானது இனிப்பான பாஷை எனவும் சொல்லிப் பெருமை பாராட்டுகிறார்கள். ஆயினும் தெலுங்கர், நாட்டில் வழங்கிவரும் பல பாஷைகளைப் பற்றிக் கொண்டிருக்கிற அபிப்பிராயம் பின் வரும் பழமொழிகளால் கண்டறியலாம்.

அரவம்-அத்வானம். தெலுங்கு-தேட்டா.
கன்னடம்-கஸ்தூரி. மாராட்டா-மண்ணு.
துருக்கம்-தூளி.

இதில் தமிழ் அரவம் என்று காணப்படுகிறது-அரவம் என்பது ஓசை அல்லது இரைச்சல் என்ற அர்த்தமாம். ஆதலால் தெலுங்கர் தமிழை இரைச்சலுக்கொத்த பாஷையென்று தீர்மானித்திருக்கிறார்கள். காகத்தின் இரைச்சலுக் கொப்புற்றிருப்பதால் தமிழை காதுக்கின்பமான பாஷையல்லவென்று சொல்வார் தமிழருக்குள்ளுமுளர்.

"தமிழ்-தங்கம் வடுகு-வறட்டி"

என்றும் சொல்லுதல் வழக்கம். தெலுங்கர் தமிழரை அரவவாண்டலு என்றும் துலுக்கர் அரிவியென்றும் சொல்லுவதைக் கவனிக்கும்

போது ஆரியம் அரவமென உச்சரிப்பு பேதமடைந்ததெனச் சமூசயத்துக் கிடங்கொடுக்கின்றது. ஆகலால் விவேகிகள் தங்களாலியன்றமட்டும் பிரயத்தனப்பட்டுத் தமிழின் பூர்வஸ்திதியை நன்றாகக் கண்டறிந்து வெளிப்படுத்துவார்களாகில் உலகத்திற்கு பெரும் பேருதவியாயிருக்கு மென்பதற்குச் சந்தேகமில்லை.

டாக்டர் செஞ்சி பழநி ஆண்டி, **M. D.**

---

* இரகுவம்சம்·

முதலாவது ஸர்க்கம்.

கடவுள் வணக்கம்.

சொல்லும் பொருளும் போலச் சேர்ந்தவர்களாயும், உலகத்திற்குத் தாய் தந்தையர்களாயு முள்ள பார்வதீ, பரம சிவன் இவர்களை, சொல் பொருள் இவற்றில் ஞான முண்டாவதற்காக நான் நமஸ்கரிக்கின்றேன்.

அவையடக்கம்.

சூரியனை முதல்வனாகவுடைய வம்சத்திற்கும் எனது அற்பமான புத்திக்கும் வெகு தூர மிருக்கின்றது. நான் தாண்ட முடியாத கடலை அறிவின்மையால் படகைக்கொண்டு தாண்டுவதற்கு விரும்புகிறேன். சிற்றறிவினனும் நூல்களைச் செய்து புகழை அடைய விரும்புகின்றவனுமான நான், நெட்டையனான புருஷனால் பறிக்கத் தகுந்த பழத்தைப் பறிப்பதற்கு ஆசையினால் கையைத் தூக்கிய குட்டையனைப்போல, பரிகாசத்திற்குப் பாத்திரனாகின்றேன். எனினும், வால்மீகி முதலிய ஆதிகவிகளின் வாக்குக்களால் வழிகாட்டி விடப்பட்ட இந்த இரகுவம்சத்தைக் கூறுவதில், ஊசியினால் துளைக்கப்பட்ட இரத்தினத்தில் நூல் எளிதில் நுழைவது போல் எனது அறிவும் செல்லுகின்றது.

அந்த நான், பிறந்தது முதல் பரிசுத்த முள்ளவர்களாயும், பயன் பெறும் வரையில் காரியத்தை விடாமுயற்சியோடு செய்கின்றவர்களாயும், எங்கும் தடையற்று அரசு செலுத்துகின்றவர்களாயும், எங்கும் தடையின்றிச் செல்லுகின்றவர்களாயும், விதிப்படி முத்தீ வளர்த்து ஹோமஞ் செய்தவர்களாயும், யாசகர்களின் விருப்பங்களை

---

* இது 'காளிதாஸ' மகாகவி வடமொழியில் எழுதிய 'இரகுவம்ச'த்தின் சரியான மொழி பெயர்ப்பு.

நிறைவேற்றுகின்றவர்களாயும், குற்றத்திற்குத் தக்கபடி தண்டிக்கிறவர்களாயும், தக்க சமயத்தில் விழிப்புடன் கூடினவர்களாயும், நல்லோர்க்குக் கொடுப்பதற்காகவே பொருளைச் சம்பாதித்தவர்களாயும், சத்தியத்தைக் காப்பதற்காக மிதமாய்ப் பேசுகிறவர்களாயும், கீர்த்தி பெறுவதற்காகப் பகைவர்களை ஜயிக்க விரும்புகிறவர்களாயும், புதல்வரைப் பெறுவதற்காக விவாகஞ்செய்து கொள்ளுகிறவர்களாயும், இளமைப் பருவத்தில் கல்வி கற்றவர்களாயும், யௌவனப் பருவத்தில் போகத்தை விரும்புகிறவர்களாயும், முதுமைப் பருவத்தில் 'வானப்ரஸ்த' தருமத்தை மேற்கொண்டவர்களாயும், முடிவில் யோகத்தினால் சரீரத்தை விடுகின்றவர்களாயுமுள்ள 'இரகுவம்ச' ராஜாக்களின் வம்சத்தைக் கூறுகின்றேன். எனக்குச் சொல்லுந் திறமை அற்பமாகவே யிருக்கின்றது. ஆயினும், இரகுவம்சத்து மன்னவர்களுடைய குணங்கள் என் செவிகளில் புகுந்து என்னைத் தூண்டுகின்றன. இந்த நூலை, குணதோஷங்களைப் பிரித்தறிவதில் வல்லமையுள்ள நல்லோர்கள் கேட்கத்தகுந்தவர்களா யிருக்கின்றனர். சுவர்ணத்தின் குணமும் குற்றமும் நெருப்பிலேயே காணப்படுகின்றன வன்றோ?

நூலின் ஆரம்பம்.

ஆதியில் இரகுவம்சத்தில் "வைவஸ்வதமநு" என்று ஒருவர் இருந்தார்; அவர் வித்துவான்களால் கொண்டாடத் தக்கவர்; அவர் வேதங்களுக்குப் * பிரணவம் முந்தியிருப்பதுபோல, மன்னவர்களுக்கெல்லாம் முதல்வரா யிருந்தார். குற்றமற்ற அக்குலத்தில் தூய்மையுள்ளவனும், 'திலீபன்' என்று பெயருள்ளவனுமான ஒரு அரசன், பாற்கடலில் சந்திரன் உண்டானதுபோல உதித்தான். பரந்த மார்பையும், விருஷபத்தின் திமில்போன்ற தோள்களையும், † ஸாலை மரம்போல் உயரத்தையும், நீண்ட கைகளையும் பெற்றுள்ள அவன், தான் மேற்கொண்ட காரியத்தை முடிப்பதில் வல்லமையுள்ள க்ஷத்திரிய தர்மமே உருவெடுத்து வந்ததுபோல விளங்கினான்.

அவன் யாவரினும் மிகுந்தபலமும், யாவரையும் கீழாக்கும் தேஜஸ்ஸும், யாவரினும் சிறந்த உயர்வும் பெற்றுள்ள சரீரத்தினால் மேருமலைபோல, உலகமுழுவதும் ஆக்கிரமித்திருந்தான். அன்றியும் உருவத்துக்குத் தக்க அறிவும், அறிவுக்குத்தகுந்த படிப்பும், படிப்

* பிரணவம் = ஓங்காரம். † ஸாலை = பனை.

புக்குத்தக்க முயற்சியும், முயற்சிக்குத்தக்க பயனும் பெற்றவனும் இருந்தான். கடலானது நீரில்வாழும் பிராணிகளால் அண்டக்கூடாததாயும் இரத்தினங்களால் ஆசிரயிக்கத் தக்கதாயும் இருப்பதுபோல், அவன், தனது பயங்கரமான பிரதாபம் முதலிய குணங்களால் அவமதிக்கக் கூடாதவனும் இனிய குடிப்பிறப்பு முதலிய குணங்களால் ஆசிரயிக்கத் தக்கவனும் இருந்தான். நல்ல ஸாரதியால் செலுத்தப்படும் தேர்ச்சக்கரம்போல, அவனது குடிகள் மநுமுதல் அநுஷ்டிக்கப்பட்ட நீதி மார்க்கத்துக்கப்பால் ரேகை (கோடு) அளவுகூட்ட விலகி நிற்கவில்லை.

சூரியன் ஆயிரமடங்காக வர்ஷிப்பிப்பதற்காகவே ஜலத்தை ஆவி ரூபமாகக் கிரகிப்பதுபோல, அவன், குடிகளின் நன்மையின் பொருட்டே அவர்களிடம் வரிவாங்கி வந்தனன். அவன் சேனையை விருதுக்காகவே வைத்திருந்தான். சாஸ்திரங்களில் நுட்பமான அறிவும் வில்லில் பூட்டிய நாண் கயிறும் ஆகிய இரண்டுமே அவனுடைய காரியங்களை நிறைவேற்றி வந்தன. அவன் மந்திராலோசனை, 1. சரீரசேஷ்டை, 2. இங்கிதம் இவற்றை இரகஸ்யமாக வைத்துக்கொண்டிருந்தமையால் அவனது முயற்சிகளெல்லாம் முற்பிறப்பில் உண்டான ஸம்ஸ்காரங்களைப் போல, காரியத்தினால் ஊகிக்கத்தக்கவைகளா யிருந்தன.

அவன் பயமில்லாதவனாகவே சரீரத்தைக் காப்பாற்றி வந்தான்; பயனை எதிர்பாரா (வியாதியில்லா)மலே தர்மத்தைச் செய்தான்; ஆசையில்லாமலே செல்வத்தைத் தேடினான்; பற்று இல்லாமலே விஷய சுகங்களை அநுபவித்து வந்தான். அவனிடம் ஞானமிருந்தும்மௌனமா யிருக்கை, சக்தியிருந்தும் பொறுத்திருக்கை, கொடையிருந்தும் புகழ்ந்து கொள்ளாமை ஆகியகுணங்கள் விருத்த குணங்களோடு சேர்ந்திருந்தமையால், அவை சகோதரர்களைப் போலத் தோன்றின. விஷயங்களில் வசப்படாதவனும், வித்தைகளின் கரைகண்டவனும், தர்மத்தில் பற்றுள்ளவனுமான அவனிடம் கிழத்தனமின்றியே (அறிவில் மாத்திரம்) முதுமை உண்டாயிற்று.

அவன், பிரஜைகளை நல்வழியில் நடக்கச் செய்வதனாலும் காப்பாற்றுவதனாலும் போஷிப்பதனாலும் அவர்களுடைய தந்தைபோல்

---

1. புருவத்தை நெறித்தல் முதலியவை மூலமாய் இன்பதுன்பங்களைச் சூசிபித்தல் 'சரீரசேஷ்டை'யாம். 2. அகத்திலுள்ளது முகத்தில் தோன்றுவது 'இங்கிதம்'மாம்.

[stamp]

விளங்கினன். அவர்களுடைய பெற்றோர்களோ அவர்களைப் பெற்றதற்கு மாத்திரம் காரண பூதர்களா யிருந்தனர். திலீபன் நீதி நிலைநிற்கும் பொருட்டே குற்றவாளிகளைத் தண்டித்துவந்தான். மக்கட்பேற்றின்பொருட்டே விவாகஞ் செய்துகொண்டான். இதனல் அவனுக்கு அர்த்தம் காமம் இவைகளும் தர்மமாகவே ஆயின. அவன் வேள்வியின் பொருட்டுப் 1. பூமியைக் கறந்துவந்தான். இந்திரன் பயிர்களை விருத்திசெய்வதற்காக ஸ்வர்க்கத்தைக் கறந்தான். (மழை பெய்யச்செய்தான்.) இவ்விருவரும் தமது †. ஸம்பத்தைப் பரிவர்த்தனை செய்துகொண்டு இரு உலகங்களையும் பரிபாலித்து வந்தனர். பிறமன்னவர்கள் இவ்வரசனுடைய புகழைப் பெற முடியவில்லை; ஏனெனில், அவன் ராஜ்யத்தில் களவு பிறர் பொருள்களினின்றும் விலகிக் காதால் மாத்திரம் கேட்கக்கூடியதா யிருந்தது. (களவே இல்லை.) பகைவனுயிருப்பினும் சிஷ்ட (நல்லவ)னுயிருப்பவன், நோயாளிக்கு மருந்துபோல, அவனுக்கு இஷ்ட (அன்பிற்குரியவ)னு யிருந்தான். நண்பனுயிருப்பினும் துஷ்டனு யிருப்பவன், பாம்பினுற் கடிக்கப்பட்ட விரல்போல, தள்ளத் தக்கவனுனன்.

பிரம்மதேவன் 1 மகாபூதங்களை ஸ்ருஷ்டிக்கும் ஸாமக்ரீகளால் திலீபனை ஸ்ருஷ்டித்தான் என்பது நிச்சயம். அதனுல் தான் அவனிடமுள்ள குணங்களெல்லாம் பரோபகாரத்தையே பயனுகக்கொண்டு விளங்கின. அவன், கடற்கரைகளையே மதில்களாகவுடையதும், கடல்களையே அகழுகளாகவுடையதும், பிறமன்னவர் ஆளுகைக்கு உட்படாததுமான பூமியை ஒரு பட்டணத்தை ஆளுவதுபோல் சுளுவில் ஆண்டு வந்தனன்.

பெருந்தன்மைக்குப் பேரெடுத்து, அதனுல் 'ஸுதக்ஷிணை' யென்று பெயர் பெற்றவளும், மகதவம்சத்தில் பிறந்தவளுமான ராஜகுமாரியானவள், யாகத்திற்கு தக்ஷிணை பத்தினியாயமைந்ததுபோல திலீபனுக்குமனைவியாக அமைந்திருந்தாள். 2 அந்தப்புரத்தில் மாதர்கள் மிகுதியாயிருந்த போதிலும் திலீபன், உத்தமகுணமுள்ள அவளாலும் பூதேவியினுலுமே தான் மனைவியைப் பெற்றவனுக எண்ணி

---

1. பூமியிலுள்ள சிற்றரசர்களிடம் கப்பணம் வாங்கினன் என்பது இதன் கருத்து. †. ஸம்பத்து = செல்வம்.

1. பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் இவை மகாபூதங்களாம்: இவை பரோபகாரத்திற்கே சிருஷ்டிக்கப்பட்டுள்ளன.

2, அந்தப்புரம் = மன்றேவியில்லம்,

னன். அவன் தனக்கு ஈடான ஸுதக்ஷிணையிடம் தனக்குப் புத்திரன் உண்டாகவேண்டுமென்று ஆவல் கொண்டான். காலதாமதமாகிக்கொண்டுவந்த இக்கோரிக்கை, என்றைக்கு ஈடேறுமோவென்று ஏங்கி அவன் காலங்கழித்து வந்தனன். அவன் 3 ஸந்ததி யுண்டாவதற்காகத் தான் செய்யவேண்டிய கருமங்களை முடிப்பதற்காக, இவ்வுலகத்தின் பெரும்பாரத்தைத் தன் தோளினின்றும் இறக்கித் தன் மந்திரிகளிடம் ஒப்புவித்தான்.

பின்பு அத் * தம்பதிகள் குழந்தையுண்டாக வேண்டுமென்று சித்தர்களாகி, பிரம்மாவை விதிப்படி பூஜித்து, குருவாகிய வஸிஷ்ட முனிவரின் ஆசிரமத்திற்குப் புறப்பட்டார்கள். ஒரு கார்மேகத்தின் மீது மேகயானையும் அதன் துணைவியாகிய மின்னலும் சேர்ந்திருப்பதுபோல, செவிக்கினிமையாயும் † கம்பீரமாயும் சப்திக்கின்ற ஒரு தேரில் அவ்விருவரும் சேர்ந்து ஏறி உட்கார்ந்தார்கள். அத்தம்பதிகள் ஆசிரமத்திற்கு உபத்திரவம் நேரிடக்கூடாதென்று சொற்ப பரிவாரத்தோடு போனார்கள். ஆயினும் அவர்கள், தேஜோவிசேஷத்தினால் ஒரு சேனையால் சூழப்பட்டவர்களைப்போலவே தோன்றினார்கள். சாலை விருக்ஷங்களின் பிசினுடைய வாஸனையோடு கூடியும் புஷ்பங்களின் தூளிகளை வாரி யிறைத்துக்கொண்டும் காட்டு மரங்களின் பத்திகளை மெதுவாய் அசைத்துக்கொண்டும் வந்த S மந்தமாருதமானது அவ்விருவர் மேலும் வீசி அவர்களுக்குச் சுகமுண்டாகிற்று.

மயில்கள் இரதத்தினோசையைக் கேட்டு மேககர்ச்சனை யென்றெண்ணித் தலையைத் தூக்கிக்கொண்டு, மனோம்மியமாய் ஷட்ஜ ஸ்வரத்தில் 'கே' 'கா' வென்று இருவிதமாகக் கூவுவதைக் கேட்டுக்கொண்டே இத்தம்பதிகள் சென்றனர். வழியை விட்டுக் கொஞ்சம் விலகி நின்று தேரைக் கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்த மான் ஜோடிகளின் கண்களை நோக்கி, இத்தம்பதிகளில் புருஷன், பெட்டைமானின் கண் தன் நாயகியின் கண்ணைப் போலிருப்பதையும், ஸுதக்ஷிணை, ஆண்மானின் கண், தனது நாயகனது கண்ணைப் போலிருப்பதையும் கண்டு மகிழ்ந்தனர். ஓரிடம் ‡ ஸாரஸபக்ஷிகள் மதுரமாகக் கூவிக்கொண்டு இவர்கள் வழிக்குக் குறுக்கே பற

---

3. ஸந்ததி = மக்கள்.

* தம்பதிகள் = ஸதிபதிகள்; † கம்பீரம் = ஆர்ப்பரிப்பு; S மந்தமாருதம் = தென்றல்; ‡ ஸாரஸபக்ஷிகள் = நாரைகள்.

ந்து கொண்டிருந்ததால், அவைகள் கால்களற்ற தோரணமாலை யைப்போல் விளங்குவதை இத்தம்பதிமார் தலையைக் கொஞ்சம் தூக்கி அண்ணாந்து பார்த்துக்கொண்டே போனார்கள்.

காற்று அநுகூலமாயடித்ததால் குதிரைக் குளம்புகளால் கிளம் பிய தூசியானது, இத்தம்பதிகளில் அரசனது பாகையிலேனும் அர சியின் தலை முடியிலேனும் படவில்லை. இதுவே இவர்கள் காரியம்கை கூடப்போவதை அறிவித்தது. பொய்கைகளிலுள்ள தாமரைப் புஷ் பங்களின் வாசனையானது இவர்களுடைய மூச்சுக்காற்றைப்போல நறுமணமுள்ளதாயும் அலைகளின் சம்பந்தத்தால் குளிர்ச்சியோடு கூடியதாகவுமிருந்தது. அதை இவர்கள் முகர்ந்துகொண்டு போனார் கள். இவ்விருவரும் தங்களால் தானஞ் செய்யப்பட்டவைகளும் * யூபஸ்தம்பங்களை அறிகுறிகளாக உடையவைகளுமான கிராமங் களில் யாகஞ்செய்வோரிடம், அவர்கள் காணக் கொண்டுவந்த பதார் த்தங்களுடன் அவர்களுடைய-என்நாளும் வீண்போகாத ஆசீர் வாதங்களைப் பெற்றுக்கொண்டும், புத்துருக்கு நெய்யை எடுத்துக் கொண்டு தரிசனம் செய்யவந்த கிழ இடையர்களிடம் போகும் வழி யிலுள்ள காட்டு மரங்களின் பெயரை விசாரித்துக்கொண்டும் சென் றனர்.

பனியிலிருந்து விடுதலைபெற்ற சந்திரனுக்கும் சித்திரை நக்ஷத் திரத்திற்கும் உண்டானதுபோல, சாதாரண வுடைபோடு போய்க் கொண்டிருந்த இத்தம்பதிகளுக்கு என்னமோ ஒரு விதமான † சோபை உண்டாகியிருந்தது. குளிர்ந்த பார்வையையுடையவனும், புத்தியில் பிரகஸ்பதிக்கு ஈடானவனுமான அரசன், இது இன்ன தென்று தன் பத்தினிக்குக் காட்டிக்கொண்டு போகையில், தான் கடந்துவந்த தூரத்தை அறியவில்லை. பிறர் பெறுவதற்கரிய புக ழைப்பெற்ற திலீபன் தன் ராணியுடனும் அலுத்துப்போன குதி ரைகளுடனும் தபோ நிஷ்டரான முனிவரின் ஆசிரமத்தைச் சாயங் காலம் அடைந்தனன்.

---

* யூபஸ்தம்பம் = வேள்வித்தூண்; † சோபை = சோபம்; அழகு; பிரபை.

(இன்னும் வரும்.)

By: M. M. Narayanasawmy Aiyer,
Mudikondam.

மாணவர் பக்கம்.

கல்வியின் பெருமை.

(முன்தொடர்ச்சி-புத்தகம்-5, சஞ்சிகை-11, பக்கம் 255.)

செந்தமிழ்த்தாயின் செல்வப் புதல்வர்காள்!

ஒருபிறப்பின்கண் கற்ற "கல்வி" எழுபிறப்பினுந் துணையாமென்று கருதி அக்கல்வியை அவமதியாது, இடைவிடாது, சிந்தையைச் சிதறவிடாது கற்க வேண்டும். மணற்கேணியைத் தோண்டுமளவும், நன்னீர் சுரப்பதுபோலக் கல்வியைக் கற்குமளவும் நல்லறிவு மிகுமென்பதை,

"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு"

என்னும் வேதவாக்கானறிக. அரிதினுமரிதாகிய மானிடப்பிறவியிற் பிறந்த ஒவ்வொருவரும், ஈகை, இரக்கம், தயவு, தாட்சண்யம், பொறுமை, உண்மை, பக்தி, ஜீவகாருண்யம், பரோபகாரம், விசுவாசம், வைராக்கியம் முதலிய குணங்களையுடையவராக இருத்தல் மானிடர்க்குரிய ஒழுக்கமாம். இவ்வகை நீதிகளையறிந்து சன்மார்க்கத்திலொழுகி நித்யானந்த மோக்ஷப்பதவியைப்பெற அரும்பெருந் துணையாயுள்ளது கல்வி யொன்றேயாம். ஆதலால், அக்கல்வியை மனிதர் வாழ்நாளளவும் பயிற்சிசெய்து வரவேண்டும்.

இங்ஙனம், கல்வியைக் கற்றவர்க்கும் கல்லாதவர்க்கும் வித்யாசமென்னை யெனின்? அஃதும் கூறுதும்.

"கல்லாது நீண்ட வொருவ னுலகத்து
நல்லறி வாள ரிடைப்புக்கு—மெல்ல
விருப்பினு நாயிருந் தற்றே யிராஅ
துரைப்பினு நாய்குரைத் தற்று"

என்பதால் கல்வி கற்றாரின் உயர்வும், கல்லாரின் தாழ்வும் விளங்கும்.

மேலும், அன்னமும் கொக்கும் பக்ஷியினத்தைச் சேர்ந்தவைகளெனினும், அவற்றுள் நீருடன கலந்திருக்கின்ற பாலை வேறு பிரித்துப் பாலைமட்டும் அருந்துகின்ற அரியவித்தை அன்னத்தினிட மிருக்கிறபடியால் அன்னமே உயர்வாகும். அக்குணம் கொக்கினிடத்தில் இல்லாதபடியால் கொக்கு உயர்வாகாது. இவைபோல கற்றவர்க்கும், கல்லாதவர்க்கும் வித்தியாசம் உண்டு.

இதன்றியும், கல்லாதவர்கள், இருகால் மாட்டிற்குச் சமமாவரென்றும் பின்வரும் செய்யுள் வலியுறுத்தா நின்றது.

"கல்வியே யாவர்க்கு மொளிகொண்ட வடிவமாங்
கல்வியே புதைய லாகுங்
கல்வியே பரதேச கமனவினை மாகுமக்
கல்வியே துணைய தாகுங்

கல்வியே திசைகொண்ட கனகீர்த்தி யைத்தரும்
கல்வியே பெருமை யாக்கும்
கல்வியே வேண்டுநற் போகங்க ளைத்தரும்
கல்வியே யின்ப மாகும்
கல்வியே நிலைகொண்ட கற்பகத் தருவதாம்
கல்வியே செல்வ மாகும்
கல்வியே பரசால் பூஜைகள் செய்விக்கும்
கல்வியே கடவு ளாகும்
கல்விக்கு நிகரான பொருளொன்று மிம்மையிற்
கருதிடினு மில்லை யில்லை
கல்லா னகத்தொன்று மில்லா னடக்குமிரு
காற்பசுவ தென்பர் மாதோ''

ஆதலின், "கற்க கசடறக்கற்பவை கற்றபின் நிற்கவதற்குத்தக" என்ற ஆன்றோர் திருவாக்கின்படி, மனிதர் தகுதியான நல்ல நூல்களைக் குற்றமறக் கற்றுக் கற்றவாறு ஒழுகினல்தான் மேற்சொல்லிய "கல்வியின் பெருமை"யையும், இன்னுமனந்த பிரயோஜனங்களையு மடையலாமேயன்றி "கல்வி" இல்லாவிடில் ஒரு பயனையுமடைய முடியாதென்பதை யாம் ஈண்டெடுத் துரைக்கச் சிறிதும் தேவையில்லை.

(இன்னும் வரும்.)

இங்ஙனம், தங்களன்புள்ள,

எஸ், கே. கோவிந்தசாமி பிள்ளை,

தமிழ் நாவலன்.

பயிர்த்தொழிலால் எளிதில் பணம் சம்பாதிக்கும் வழி.

நம் இந்தியர் பலவழிகளிலும் பணம் சம்பாதிப்பதற்கு முயன்று பயன் பெருமல் கஷ்டப்படுகிறுர்கள். பயிர்த்தொழில் விசேஷபலனைக் கொடுக்கக் கூடியதாயிருந்தும் அதைச் செய்வோரும் தந்திரமாகச் செய்யாததால் இலாபம் பெருமல் வருந்துகிறுர்கள். இது அவர்களுடைய யுக்திக் குறைவினல் நேர்வதேயாகும். பயிர்த்தொழிலால் எளிதில் பணம் சம்பாதிப்பதற்கு அநேகம் மார்க்கங்களுண்டு. அவற்றுள் ஒன்றைக் கூறுகிறேம். வேறுபயிர் செய்வதற்கு உபயோகமில்லாமல் கிடக்கும் மணற்பூமியில் இரண்டாயிரம் சவுக்குச் செடிகளை நட்டுவளர்த்தால் அத்தொழிலில் அதிகப் பிரயாசையிராது. செடிகள் ஒரு ஆள்மட்டம் வளரும் வரையில் வெயிற்காலத்தில் மட்டும் அவைகள் பட்டுப்போகாதபடி கொஞ்சம் தண்ணீர்பாய்ச்சி வரவேண்டும். அப்பால் அவற்றை நாம் விசேஷமாகக் கவனிக்க வேண்டியதில்லை. அவை தாமே வளர்ந்து

மரமாகிவிடும். ஜீவனத்திற்கான வேறு தொழில்களைச் செய்துகொண்டே இடையில் சிற்சில நேரங்களில் அவற்றைக் கொஞ்சம் கவனித்து வந்தால் போதும். அச்செடிகள் எட்டாவது அல்லது பத்தாவது வருடத்தில் வெட்டும் பருவமுள்ள பெரிய மரங்களாய்விடும். அவற்றுள் சேதம் 500 போனாலும் 1500. மரங்கள் இருக்கும். மரம் ஒன்றை ஒரு ரூபாவுக்கு விற்றாலும் 1500-ரூபா கிடைக்கும். இத்தொகையைக் கொண்டு ஒரு விவசாயி எவ்வளவோ விருத்தியடைந்து விடலாம். விவசாயத்தில் இவ்வளவு எளிதாக இலாபம் சம்பாதிக்கும் எத்தனையோ மார்க்கங்களிருக்கும்போதும் நம் இந்திய விவசாயிகள் வறுமையால் கஷ்டப்படுவது வியக்கத்தக்கதா யிருக்கின்றது. "பூதேவி பலன் கொடுப்பதுபோல் வேறெவரும் கொடுக்கமாட்டார்கள்" என்பது ஓர் முதுமொழி'

விவசாய தந்திரன்.

விநோதக் குறிப்புகள்.

1. பசியாதவர்:—அமெரிக்காவில் டாக்டர் டர்னர் என்பவர் பசியெடுக்காதவரென்று பெயர் பெற்றிருக்கிறார். தண்ணீர் தவிர வேறே எதையும் அவர் புசியாமல் 80 நாள் வரையுமிருக்கிறார். அதேமாதிரியாய் 33 சிறுவர்களை அவர் பழக்கிக்கொண்டு வருகிறார். அவர்களுக்கு மாம்சமுதலிய அசுத்த வஸ்துக்களைக் கொடாமல் ஒரேவேளை போஜனத்துடன் வளர்த்து வருகிறார். ஒரு நாளையில் 3 அல்லது 4 வேளை உண்பது சுகாதாரத்தைக் கெடுக்கக் கூடியதென்றும் அபிப்பிராயம் கொள்கிறார்.

"ஒருபோது யோகியே யொண்டளிர்க்கை மாதே
இருபோது போகியே யென்ப—திரிபோது
ரோகியே நான்குபோ துண்பா னுடல்விட்டுப்
போகியே யென்று புகல்."

என்ற இந்துக்களின் சித்தாந்த உண்மையை இந்த டாக்டர் கண்டறிந்தே அச்சிறுவர்களை அவ்வண்ணம் வளர்த்து வருகிறார்போலும்.

2. கல்வியிலாவது, செல்வத்திலாவது, அதிகாரத்திலாவது குலத்திலாவதுதான் சிறந்தவனென்று கருதி எவனுகிலும் பிறரை உல்லங்கனமாகப் பேசினுல் அவன் பெருத்த அவமானமடைவானென்பது சத்தியம். ஆகையால்,

"யாகாவராயினு நாகாக்ககாவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு."

3. வனப்பிற்சிறந்த வனிதையர் காட்சி:—ஸ்பா என்னும் நகரத்தார் அதிசௌந்தரிய ஸ்திரீ காட்சியொன்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். தேசம், ஜாதி, மதம், என்னும் இவற்றின் பேதமின்றி, எவ்வித ஸ்திரீகளும் அங்குசென்று காட்சி கொடுக்கலாம். யாவரினும் அழகிற் சிறந்த மங்கைக்கு 20000 ரூபாய்

கள் சன்மானம் கொடுக்கப்படுகிறதாம். அந்தந்த தேசாச்சாரத்துக்குத் தக்கவாறு அவரவர்கள் ஒவ்வொரு குணவிசேஷத்தையே அழகென்று அபிப்பிராயப் பட்டு வருகின்றபடியால் அழகுள்ள ஸ்திரீ இன்னளென்பதை எப்படியறிதல் கூடுமோ?

4. **சிட்சையடைந்த சிறுவர்கள் சீர்படு மார்க்கம்:**—இந்தியாவில் குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கான இந்தியன் பினல் கோடின்படி சிட்சையடைந்த சிறுவர்களை சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருக்கும்போது அவர்களுக்குக் கைத்தொழில் வித்தியாப்பியாசமும், நற்புத்தி போதக உபந்நியாச சிரவணமுமிருக்க வேண்டுமென்று நமது கவர்மெண்டார் தீர்மானித்து செங்கல்பட்டு சிறைச்சாலையில் அவ்வாறே நடந்துவருவதைக்கேட்டு பேரானந்தமடைகின்றோம். குற்றம் செய்தவனைத் தண்டித்து மாத்திரம் விடுவதை விட, இனி அவன் குற்றஞ்செய்யாவகைக்கு இடந்தேடி வைப்பது அறமெனப்படும், எவற்றுள்ளும் இதுவே சிறந்த அறமாம்.

5. **ஓர் பட்சியின் ரோஷம்:**—பிரான்சுதேசத்திலுள்ள மர்ஸேலிஸ் பட்டணத்தில் ஆஸ்திரிச்சு என்னும் பட்சிகளை சிலர் பந்தயத்துக்கு விட்டார்கள். அத்தருணத்தில் அந்த பட்சிகளில் ஒன்று தோல்வியடைய வேண்டுமென்று கருதி ஒருவன் அதன் சிறகுகளில் சிலவற்றை கத்தரித்து விட்டான். அவன் அப்படிச்செய்தது அதற்கு எவ்வளவும் நோயைத்தராதிருந்தும் அது தான் பந்தயத்தில் ஜெயமடைவதற்குப் பெருத்த இடையூறென்பதை யுணர்ந்து மஹா ரோஷங்கொண்டு அதிக கோபத்துடன் அவனைத் துரத்தித்துரத்தி உதைத்து குத்திக் கொன்றுவிட்டது. இப்படிப்பட்ட பட்சிகளுக்கே இவ்வளவு ரோஷமிருக்குமானால் கல்விச் சாலைகளில் கல்வி பயின்று வரும் வித்தியார்த்திகள் கல்வியிலே தம்மிலும் சிறந்த மாணவரைக்கண்டு எவ்வளவு ரோஷமுடையவர்களா யிருக்கவேண்டும்.

சந்தா நேயர்கட்கு விஞ்ஞாபனம்.

தருமசீலனை ஆதரித்துவரும் கனவான்களே!

சீலனுக்கு ஐந்தாவது வருடம் முடிந்து ஆறாவது வருடமும் பிறந்து சித்திரைமாதம் சஞ்சிகையும் இச்சஞ்சிகையும் சந்தாதாரர்களுக்கு அனுப்பப்பட்டு விட்டபடியால், முன் சந்தாத்தொகை பாக்கியுள்ளவர்கள் அதை அனுப்பிவிடுவதோடு அவர்களும் புதிய சந்தாதாரர்களும் இவ்வருடத்திய சந்தாத்தொகையையும் அனுப்பிவிடும்படி கேட்டுக்கொள்கிறோம். அப்படி அனுப்பாதவர்களுக்கு அடுத்த ஆனிமீ சஞ்சிகை சந்தாந்தொகைக்காக வி. பி. யில் அனுப்பப்படும். வி. பி. செலவு அனுவசியமாக அதிகமாகுமாதலால் ஒவ்வொருவரும் அடுத்தமீ சஞ்சிகை வெளிவருவதற்குள் சந்தாத்தொகையை மணியார்டர் செய்து விடுவதுநலம். அப்படி அனுப்பாதவர்கள் வி பி. யையாவது திருப்பிவிடாமல் தயவுசெய்து பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

இங்ஙனம்.
பத்திராதிபர்.

10450

அழகுள்ளவை! விலஸ சகாயம்!!

இமிடேஷன் புது மாதிரியான துப்பட்டாக்கள்.

இந்த துப்பட்டாக்கள் நல்ல பட்டு நூலினால் நெசவுசெய்யப் பட்டுள்ள குலாபி, பச்சை, புளூ, வெள்ளை 5 முழ நீளம் மூன்று முழ அகலம் உள்ளவை. துப்பட்டா 1-க்கு ரூ. 3 12 0

ஆதிலட்சுமி சில்க் அவுஸ்,
பாலகிருஷ்ணன் லேன், ஜி. டி. சென்னை.

தருமசீலன் பிரஸ் விளம்பரம்.

நமது தருமசீலன் அச்சுக்கூடத்தில் தமிழிலும், இங்கிலீஷிலும், சகாயமான சார்ஜில் அச்சுவேலைகள் வெகுசுத்தமாகச்செய்து கொடுக்கப்படும். வெளியூரிலிருந்து, நம் ஆபீஸில் அச்சுவேலைகள் செய்துகொள்ளப் பிரியமுள்ளவர்கள், அச்சிடவேண்டியகாப்பிகளை நமக்கனுப்பி, பாரம் ஒன்றுக்கு ஒருரூபா விகிதம் புரூப் சார்ஜும் கொடுத்தால் அவ்வேலைகளை நாமே புரூப்பார்த்து முடித்துக்கொடுப் போம்.

மானேஜர்,
தருமசீலன் பிரஸ்,
½ பாலகிருஷ்ணன் சந்து,
ஆச்சாரப்பன் தெரு, ஜி. டி. சென்னை.

இனாம்! "கிலாபத்" இனாம்!! இனாம்!!

இஸ்லாம் மார்க்க உண்மைகளையும் ராஜீய தேசீய விஷயங்களையும் தன்னுட்கொண்டு, ராயல் 8-பக்கங்கொண்ட பெரிய ஸைஸில் ஒவ்வொரு சஞ்சிகையும் 48-பக்கங்களுடன் நல்ல உயர்தர கிளேஸ் காகிதத்தில் மிக நேர்த்தியாகச் செந்தமிழில் அச்சிடப்பட்டு ஒவ்வொரு மாதம் முதல் தேதியிலும் வெளியாகும் "தாருல் இஸ்லாம்" என்னும் மாதப் பத்திரிகைக்கு 1923-ல் சந்தாதாராகச் சேரும் ஒவ்வொரு புதிய நண்பருக்கும் ஒவ்வொரு கிலாபத் புத்தகம் இனாமாகக் கொடுக்கப்படும். கொஞ்சம் பிரதிகளேயிருக்கின்றன. முந்துங்கள்! முந்துங்கள்.

வருஷ சந்தா ரூ 3-0-0. அயல்நாடுகளுக்கு ரூ 4-0-0.

"தத்துவ இஸ்லாம்" நான்காம் கமலம் 480-பக்கங் கொண்ட பைண்டு புத்தகம் விலை ரூ. 3—0—0.

"தாருல் இஸ்லாம்" ஆபீஸ்,
நாச்சியார்கோவில், தஞ்சை ஜில்லா.

சுகானந்த

அயத்தங்க திராவகம்.

அனுபவமானது! பிரசித்தி பெற்றது!! சஞ்சீவி போன்றது!!!

இதன் முக்கிய குணங்களாவன:—

நோயற்ற வாழ்க்கையே குறைவற்ற செல்வம். ஒரு குடும்பத்திலிருப்போர் நோயில்லாமலிருக்க வேண்டுமானால் நோயைத்தடுக்கக்கூடியதும், நோய் வந்தாலும் உடனே அதனை ஒழித்துக் கொள்ளக்கூடியதுமான வழிகளைத் தேடவேண்டும்.

இந்த மருந்து ஒரு திராவக பதார்த்தம். தமிழ்நாட்டு வைத்திய முறையைக்கொண்டு செய்யப்பட்டதாகும். எல்லா வியாதிகளையும் தீர்த்து வைக்கக்கூடிய சஞ்சீவி போன்றது. இந்த மருந்து எந்தவீட்டி லிருக்கிறதோ அங்கே வியாதியானது எட்டிப்பார்க்கவும் பயப்படும். இதற்குளங்களிடம் வந்திருக்கும் நற்சாட்சிப் பத்திரங்களிலிருந்து இது எல்லா வியாதிகளையும், சூரியன் பனியை ஒழிப்பது போல நீக்கி வைக்கிறதென அறியக் கூடியதாயிருக்கின்றது. தெய்வீகாமிர்தம் எங்கள் மனிதாமிர்தம் ஒன்றே. எவ்விதமாகிய கடின பத்தியமும் அனுபானமும் இதற்கில்லை. எந்த வியாதிக்கும் குளிர்ந்த ஜலத்தில் சில துளிகள் விட்டு அருந்திவிட்டுக் குணத்தை உடனே பார்க்கலாம். இதுதேச முழுவதிலும் அதிக சிறப்படைந்து வருகிறது.

20 நாள் மருந்து ரூ. 1 8 0 40 நாள் மருந்து ரூ. 2 0 0

(ஓர் இரகசிய ரப்பர் பை.)

(SUKANANDA.)

இக்கருவி அமெரிக்கா தேசத்தில் மிருதுவான ரப்பால் தயார் செய்யப்பட்டது. இதை உபயோகித்தால் இது, ஸ்திரீ சம்பந்தமான (Veneral Diseases) மேகரோகங்கள் அணுகாமல் சரீரத்தை வெகு ஜாக்கிரதையாய்க் காப்பாற்றும்.

பை 1-க்கு டின்னுடன் ரூபா. 1 4 0

ஆதிலட்சுமி கம்பெனி,

½ பாலகிருஷ்ணன் சந்து, ஆச்சாரப்பன் தெரு, ஜி. டி. சென்னை.